அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரில் ஏற்பட்டிருக்கிற சில நிலைமைகளில்—இது அரசியலுக்கு அப்பாற்ப்பட்டது, இது ஒரு சமுதாயப் பிரச்சினை—நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பும்போது இப்படிப் பட்ட விவாதத்தை இந்த மன்றத்தில் அனுமதிக்கலாமா? விதி முறைகளின்படி இது சரியா? எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் சம்மதத்தைப் பெற்றுத்தான் பேசுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக எந்தெந்தத் துறைக்கு மானியம் கேட்கப்பட்டிருக்கிறதோ அது பற்றி மட்டும்தான் பேச வேண்டும். இங்கு போலீஸ் என்ற 12-வது நிதிக் கோரிக்கையின் கீழ் போலீஸ், ஸிட்டி எக்ஸிக்யூட்டிவ் ஃபோர்ஸ் என்றிருப்பதால் அதுபற்றிப் பேசுவது முறைதான்.

முற்பகல் 11-00 **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சப்பிளிமெண்டரி கிராண்ட்மீது பேசும்பொழுது ஒரு வரம்பிற்கு உட்பட்டு நிற்க வேண்டும். அவ்வாறு ஒரு வரம்பிற்கு உட்பட்டு பேச வேண்டுமே தவிர சட்டம், அமைதியைப் பற்றிப் பேசுவது என்பது அல்ல. அதையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அமைச்சரவர்கள், எதிர்க் கட்சித் தலைவரின் உடன்பாட்டின்மீது பேசினாரா என்று கேட்டார்கள். அவர்கள் பேசும்பொழுது எந்தவிதமான உணர்ச்சியையும் தூண்டிவிடாத முறையிலே பொதுவாகத்தான் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். நீதி விசாரணை என்று போட்டுவிட்டார்கள். அதன் பிறகு அமைச்சரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. சில அமைச்சர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதால் காங்கிரசின் நிலை என்ன, எங்கள் கருத்துக்கள் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. வன்முறைகளைத் தூண்டி விட வேண்டாமென்ற நிலைதான் இருக்கிறது.

MR. DEPUTY SPEAKER : If an Appropriation Bill is in pursuance of a supplementary grant in respect of an existing service, the discussions shall be confined to the items constituting the same and no discussion shall be raised on the original grant nor the policy underlying it save in so far as it may be necessary to explain or illustrate a particular item under discussion.

ஆகவே பொதுவான விவாதத்தை மானியக் கோரிக்கையின் போது எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிப் பலதரப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அமைதியான நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, இதை விரிவுபடுத்திப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.